## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. ராதாதேவி. | அசல் வழக்கு எண். | 29/2020 |
| த/பெ. | - | சுப்ரமணி | பி.சா. | 2 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

19.06.2026

**குறுக்கு விசாரணை**

**1.** வாதியை  எனக்கு தெரியும், வாதி எனது உறவினர். வாதியின் தகப்பனார் பெயர் கண்ணன். வாதியின் தகப்பனார் எனக்கு சின்ன மாமனார் உறவு முறை. என் கணவரும் வாதியும் பங்காளிகள் என்றால் சரிதான். வழக்கு சொத்து சின்னகொழுவாரி கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்து என்ன வகையான சொத்து என்றால் வீட்டு மனை. வழக்கு சொத்து சம்மந்தமாக தான் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால்  சரிதான். யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் என் மீதும், என் மகள்கள் மீதும், என்னிடம் கிரையம் பெற்ற நபர் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனக்கு எழுத படிக்க தெரியாது.  என் பிரமாண வாக்குமூலத்தை 4-ம் பிரதிவாதி  சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**2.** வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நாங்கள் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கு தற்பொழுது வரை நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால், 4-ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார். என் கணவர் சுப்ரமணி என்பவரை 4-ம் பிரதிவாதி பார்த்ததில்லை என்றால் சரிதான், என் கணவர் இறந்த பிறகு தான் 4-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தோம். வழக்கு சொத்திற்கு அருகில் வாதியின் தகப்பனாருக்கு பூமி உள்ளது என்றால் வாதியின் தங்கை சித்ரா என்பவருக்கு வீடு உள்ளது, அதில் அவர் குடியிருந்து வருகிறார். அந்த இடம் சித்ராவிற்கு அவரது தகப்பனார் கொடுத்தது என்றால் சரியல்ல.

**3.** வாதி வழக்கறிஞர் அறிவிப்பை எனக்கு அனுப்பிய பிறகு 1 மாதம் கழித்துதான் நான் 4-ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். வாதியும், எனது கணவரும் கிரைய உடன்படிக்கை போட்டு அதன் பேரில் எனது கணவர் ரூ.50,000/- பெற்றுக்கொண்டு விட்டார் என்றும், மீதி தொகையை என்னிடம் வாதி கொடுத்துவிட்டார் என்றும், மீதி தொகையை பெற்றுக்கொண்டு நான் தற்பொழுது வரை கிரையம் உடன்படிக்கையை நிறைவேற்ற வரவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4.** எனது சொந்த ஊர் மஞ்சங்குப்பம். எனக்கு மஞ்சகுப்பத்தில் உறவினர்கள் உள்ளனரா என்றால் உள்ளனர். மஞ்சகுப்பத்தில் மஞ்சினி என்பவரின் குமாரர் குமார் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. குமார் எனது சித்தப்பா மகன்

என்றால் எனக்கு தெரியாது. நான் சென்னைக்கு சென்று 45 வருடங்கள் ஆகிறது, சிறு வயதில் மஞ்சினி என்பவரை தெரியும், அவரது பிள்ளைகள் பற்றி எனக்கு தெரியாது. மஞ்சினி மகன் குமார் என்பவரை என் வீட்டிற்கு அழைத்து வந்து மீதி கிரையத் தொகை ரூ.10,000/-த்தை வாதி என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் கிரையம் கொடுத்தபொழுது வழக்கு சொத்தான காலி மனை என்றால் சரிதான். நான் கிரையம் கொடுத்த பின்பு தான் 4-ம் பிரதிவாதி மின் இணைப்பு பெற்றார் என்றால் சரிதான். எவ்வளவு தொகைக்கு நான் கிரையம் கொடுத்தேன் என்றால் ரூ.3,50,000/-.

5. வழக்கு சொத்தை கிரைய உடன்படிக்கையின் படி வாதிக்கு கிரையம் கொடுக்காமல் அதிக கிரைய தொகைக்காக வழக்கு சொத்தை 4-ம் பிரதிவாதிக்கு விற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. வாதி எனது தாய்மாமன் மகன். பொதுவாக சொத்துக்களை விற்க்கும்பொழுது உறவினர்களுக்கு தான் முன்னுரிமை கொடுக்கப்படும் என்றும், அதன் காரணமாக நான் வாதிக்கு தான் கிரையம் கொடுத்திருக்கவேண்டும் என்றால், நான் அவரிடம் கேட்டேன், அவர் கிரையம் வாங்க முன்வரவில்லை, 4-ம் பிரதிவாதிக்கு விற்ற பின்பு தற்பொழுது பிரச்சனை செய்து வருகிறார். கிரைய ஒப்பந்தப்படி வாதிக்கு கிரையம் கொடுக்காமல் 4-ம் பிரதிவாதிக்கு கொடுத்த கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி கோரியவாறு வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

District Munsif
Vanur.